செ.வெ.எண்: 413/2020 நாள்: 21.10.2020

# திருவண்ணாமலை மாவட்டத்தில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூ.3.81 கோடி மதிப்பீட்டில் 4 ஏரிகளில் புனரமைப்பு பணிகள் தமிழ்நாடு நீர்வள ஆதாரங்கள் பாதுகாப்பு மற்றும் ஆறுகள் மறுசீரமைப்பு கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் நேரில் ஆய்வு...

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், காரப்பட்டு, செங்கம், மற்றும் கரியமங்கலம், திருவண்ணாமலை வட்டம், வெறையூர், ஆகிய 4 பெரிய ஏரிகளில் பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பு மூலமாக மாண்புமிகு முதலமைச்சரின் குடிமராமத்து திட்டத்தின் கீழ் 2020-2021 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.3.81 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளை செய்தியாளர்களுடன் சுற்றுப் பயணம் மேற்கொண்டு தமிழ்நாடு நீர்வள ஆதாரங்கள் பாதுகாப்பு மற்றும் ஆறுகள் மறுசீரமைப்பு கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் கொ. சத்தியகோபால், இ.ஆ.ப. அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பொ. இரத்தினசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா, திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் திருமதி. ஸ்ரீதேவி, மத்திய பெண்ணையாறு வடிநில கோட்ட கண்காணிப்பு பொறியாளர் திரு. சுரேஷ், செயற்பொறியாளர் திரு. ஏ. மகேந்திரன், உதவி செயற்பொறியாளர் திரு. ஏ. அறிவழகன், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. அமித்குமார், இ.ஆ.ப., துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி. அஜீதாபேகம், பாசன சங்க தலைவர்கள், உறுப்பினர்கள், விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் உடன் இருந்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள பொதுப்பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பை சார்ந்த ஏரிகளை அந்தந்த பகுதி விவசாயிகளின் பங்களிப்புடன் குடிமராமத்து திட்டம் செயல்படுத்தப்படுத்தி வருகிறார்கள். இத்திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டத்தில் 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.31.20 கோடி மதிப்பீட்டில் 59 ஏரிகள் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது, இதன் மூலம் 6034.81 ஹெக்டேர் விவசாய பாசன நிலங்கள் பயன்பெறும். இதன்படி, திருவண்ணாமலை மத்திய பெண்ணை ஆறு வடிநில கோட்டம் மூலமாக 54 ஏரிகள் ரூ.28.89 கோடி மதிப்பீட்டிலும், காஞ்சிபுரம் கீழ்பாலாறு வடிநில கோட்டம் மூலமாக வெம்பாக்கம் வட்டத்தில் 5 ஏரிகள் ரூ.2.31 கோடி மதிப்பீட்டிலும் புனரமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. குடிமராமத்துப் பணிகள் நீரினை பயன்படுத்தும் சங்கங்கள் மூலமாக நியமன முறையில் விவசாயிகளின் 10% பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் தண்ணீர் வீணாவதை தடுத்தும், தண்ணீரினை சேமித்தும், பாசன உறுதியளிக்கவும், நீர் ஆதாரத்தை பெருக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

செங்கம் வட்டம், காரப்பட்டு பெரிய ஏரியில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூ.96.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு வருகிறது. இந்த ஏரியின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு 471.00 ஏக்கர், கரை நீளம் 3505 மீட்டர், வரத்துக் கால்வாய் நீளம் 5 கி.மீ. ஆகும். இந்த ஏரியில் பழுதடைந்த மூன்று மதகுகளும், நான்கு கலங்கலும் தற்போது புதுப்பிக்கப்பட்டு வருகிறது. காரப்பட்டு ஏரிக்கு நாகப்பாடி ஏரி மற்றும் காரப்பட்டு நெல்லிக்குப்பம் ஏரியிலிருந்து நீர் வருகிறது, மேலும், இந்த ஏரியின் உபரி நீர் கொரட்டாம்பட்டு ஏரிக்கு செல்கிறது. காரப்பட்டு ஏரி பாசன சங்கம் அமைக்கப்பட்டு தற்போது குடிமராமத்து பணிகள் நடைபெற்று வருகிறது. காரப்பட்டு ஏரியின் மூலம் இப்பகுதிக்கு உட்பட்ட 471.00 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறும்.

செங்கம் வட்டம், செங்கம் பெரிய ஏரியில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூ.98.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு வருகிறது. இந்த ஏரியின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு 534.26 ஏக்கர், கரை நீளம் 2820 மீட்டர் ஆகும். இந்த ஏரியில் பழுதடைந்த மூன்று மதகுகளும், இரண்டு கலங்கலும் தற்போது புதுப்பிக்கப்பட்டு வருகிறது. செங்கம் ஏரிக்கு காயம்பட்டு ஏரியிலிருந்து நீர் வருகிறது, மேலும், இந்த ஏரியின் உபரி நீர் கரியமங்கலம் புத்தேரிக்கு செல்கிறது. செங்கம் ஏரி பாசன சங்கம் அமைக்கப்பட்டு தற்போது குடிமராமத்து பணிகள் நடைபெற்று வருகிறது. செங்கம் ஏரியின் மூலம் இப்பகுதிக்கு உட்பட்ட 534.26 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறும்.

செங்கம் வட்டம், கரியமங்கலம் பெரிய ஏரியில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூ.97.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு வருகிறது. இந்த ஏரியின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு 238.00 ஏக்கர், கரை நீளம் 1700 மீட்டர் ஆகும். இந்த ஏரியில் பழுதடைந்த இரண்டு மதகுகளும், இரண்டு கலங்கலும் தற்போது புதுப்பிக்கப்பட்டு வருகிறது. கரியமங்கலம் ஏரிக்கு செங்கம் ஏரியிலிருந்து நீர் வருகிறது, மேலும், இந்த ஏரியின் உபரி நீர் கரியமங்கலம் புத்தேரிக்கு செல்கிறது. கரியமங்கலம் ஏரி பாசன சங்கம் அமைக்கப்பட்டு தற்போது குடிமராமத்து பணிகள் நடைபெற்று வருகிறது. கரியமங்கலம் ஏரியின் மூலம் இப்பகுதிக்கு உட்பட்ட 238.00 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறும்.

திருவண்ணாமலை வட்டம், வெறையூர் பெரிய ஏரியில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு வருகிறது. இந்த ஏரியின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு 120.93 ஏக்கர், கரை நீளம் 1380 மீட்டர் ஆகும். இந்த ஏரியில் பழுதடைந்த இரண்டு மதகுகளும், இரண்டு கலங்கலும் தற்போது புதுப்பிக்கப்பட்டு வருகிறது. வெறையூர் ஏரிக்கு பெரியகல்லப்பாடி ஏரியிலிருந்து நீர் வருகிறது, வெறையூர் ஏரி பாசன சங்கம் அமைக்கப்பட்டு தற்போது குடிமராமத்து பணிகள் நடைபெற்று வருகிறது. வெறையூர் ஏரியின் மூலம் இப்பகுதிக்கு உட்பட்ட 120.93 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதி பெறும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் மேற்கண்ட ஏரிகளின் கரையில் உள்ள புதர்களை அகற்றுதல், மண்ணரிப்புகளை நிரப்பி கரையினை பலப்படுத்துதல், கலங்கள் சீரமைத்தல், மதகுகள் புதுப்பித்தல், வரத்துக் கால்வாய் மற்றும் பாசனக் கால்வாய் சீரமைத்தல், எதிர்கரை அமைத்தல் மற்றும் எல்லைக் கற்கள் நடுதல், ஆகிய பிரதான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**